بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜும்ஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *06.02.2015* அன்று ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 6 February 2015 (Tamil)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புத்தகங்களைப் படிப்பதனால் ஏற்படுகின்ற சாதகமான மற்றும் எதிர்மறையான தாக்கங்கள் தொடர்பாக எந்த சிந்தனையுடன் மனிதன் அவற்றை படிக்கின்றானோ அதே போன்ற தாக்கங்கள்தான் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்:

மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் அம்ரோஹி அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள். அதாவது மவ்லவி பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருந்து வந்தார்கள். ஆனால், நானோ அவர்களை அதிகமாக எதிர்1த்து வந்தேன். அதாவது, மவ்லவி பஷீர் சாஹிப் அவர்கள் எப்போதும் மற்றவர்களிடம் பராஹீனே அஹ்மதிய்யாவை படிக்கும்படி போதனை செய்து வந்தார்கள். இந்த புத்தகத்தை எழுதிய இந்த நபர் முஜத்தித் ஆவார் என்று கூறி வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: இறுதியில் நான் அவரிடம் (அதாவது மவ்லவி அஹ்ஸன் சாஹிப் அவர்கள் மவ்லவி பஷீர் சாஹிபிடம் கூறினார்கள்) வாருங்கள்! அவர்கள் முஜத்தித்தா? இல்லையா? என்பதைப் பற்றி விவாதம் செய்வோம் என்று கூறினேன். ஆனால், விவாதத்தின் வடிவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் நீங்கள் அவருக்கு ஆதரவாளராக இருப்பதால் நீங்கள் எதிர்ப்பின் பார்வையுடன் புத்தகங்களை வாசிக்க வேண்டும். நான் அவரது எதிரியாக இருக்கின்றேன். எனவே, அவருக்கு சாதகமான பார்வையுடன் புத்தங்களைப் படிப்பேன் என்று நான் கூறினேன். இதற்கு பிறகு 7 அல்லது 8 நாட்கள் புத்தகங்களைப் படிப்பதற்கான நிர்ணயிக்கப்பட்டது. இருவரும் நூல்களைப் படித்தனர்.

மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் கூறுகின்றார்கள்: இதன் விளைவு எப்படி வெளிப்பட்டது என்றால் எதிரியாக இருந்த நான் அஹ்மதி ஆகிவிட்டேன். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிக அருகில் இருந்து அவர் மிகவும் தொலைவில் சென்று விட்டார். மவ்லவி அஹ்ஸன் சாஹிபிற்கு விஷயம் புரிந்து விட்டது. பஷீர் சாஹிபின் உள்ளத்திலிருந்து ஈமான் அகன்று விட்டது.

***இதுபற்றி தனது கருத்தை தெரிவித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மனோதத்துவ அறிவின் அடிப்படையில் பார்க்கும் போது விவாதங்கள் செய்வது மிகவும் இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. சில நேரங்களில் அது மிகப்பெரும் இழப்பிற்குக் காரணமாக ஆகி விடுகின்றது. இவை எத்தகைய நுட்பமான விஷயங்களாக உள்ளன என்றால் கற்றுக் கொடுக்கின்ற ஒவ்வொருவரும் இவற்றை புரிவதற்கான தகுதி உடையவராக இருப்பதில்லை.

எனவே, நல்ல விஷயத்திலிருந்து கூட அதை ஆட்சேபனை செய்யும் விதத்தில் அதற்கு பொருள் கூற முயற்சி செய்தால் அதுவே தடுமாற்றத்திற்குக் காரணமாக ஆகி விடுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புத்தகங்கள் மீது பல மக்களும் ஆட்சேபனை செய்கின்றனர். நாங்கள் அவற்றை படித்தோம். அதில் இது எழுதப்பட்டிருக்கின்றது; அது எழுதப்பட்டிருக்கின்றது என்று கூறுகின்றனர். ஏனென்றால் அவர்கள் ஆட்சேபனை செய்வதற்காகவே அவற்றை படிக்கின்றனர். பிறகு முன்னும் பின்னும் உள்ள விஷயங்களைச் சேர்த்து அவர்கள் கூறுவதில்லை. எனவே, இது ஒரு புதிய விஷயமல்ல. ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் இறைவனின் வார்த்தைகளிலிருந்து கூட ஆட்சேபனை செய்யத்தக்க விஷயங்களைக் கூறுகின்றனர். எனவேதான் திருக்குர்ஆன் தொடர்பாக அல்லாஹ் தானே இது நம்பிக்கையாளர்களுக்கு குணமளிக்கக் கூடியதாகவும் கருணையாகவும் இருக்கின்றது. ஆனால், ஆட்சேபனை செய்கின்ற அநீதியிழைக்கும் மக்களை இது நஷ்டத்தில் ஆழ்த்தி விடுகின்றது; அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றது என்று கூறுகின்றான். இதனால் அவர்கள் தொலைவில் விலகிச் சென்று இறைவன் மீது மேலும் ஆட்சேபனைகளைச் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இஸ்லாத்தின் மீதும் மார்க்கத்தின் தேவை மீதும் ஆட்சேபனை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். எனவே, இறைவனின் வார்த்தைகளாக இருந்தாலும் எதுவரை ஒருவரை தூய உள்ளத்துடன் அதை படிப்பதற்கு முயற்சி செய்யாத வரை அது அவருக்கு பலனளிக்காது.

பிறகு தொழுகையின் முக்கியத்துவம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு வழக்கில் ஆஜராவதற்காகச் சென்றார்கள். வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஆஜராவதில் அவர்களுக்கு காலதாமதம் ஏற்பட்டு விட்டது. அப்போது தொழுகையின் நேரம் வந்து விட்டது. மக்கள் அவர்களை தடுத்த பிறகும் கூட அவர்கள் தொழுவதற்காக சென்று விட்டார்கள். அவர்கள் தொழுகைக்காக சென்ற பிறகு அவர்கள் வழக்கு விசாரனைக்காக அழைக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். தொழுது முடித்த பிறகு நீதிமன்றத்திற்கு வந்தார்கள். நீதிமன்றத்தின் நெறிமுறைகளுக்கேற்ப அவர்கள் விசாரனைக்காக வராமல் இருந்ததன் காரணமாக நீதிபதி அவர்களுக்கு எதிராக ஒரு தரப்பிற்கு சாதகமாக மட்டும் தீர்ப்பு கூறியிருக்க வேண்டும். ஆனால், அல்லாஹ்வுக்கு அவர்களது இந்த விஷயம் எந்த அளவு விருப்பமானதாக இருந்ததென்றால் அல்லாஹ் நீதிபதியின் கவனத்தை இவர் தொழுகின்றார்; இறைவனை வணங்குகின்றார் என்பதன் பக்கம் திருப்பி விட்டான். எனவே, அந்த நீதிபதி அவர்கள் வராமல் இருந்ததை பொருட்படுத்தாமல் அவர்களுக்கு சாதகமாகவோ அல்லது அவர்களது தந்தையாருக்கு சாதகமாகவோ தீர்ப்பு கூறினார். அவர்களுடன் சம்பந்தப்பட்ட வழக்குகளாக அவை இருந்ததில்லை. சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகளாக அவை இருந்தன. எனவே, அத்தகைய வழக்குகளாக செல்ல வேண்டியது இருந்தால் வேறு வழியின்றி தந்தையாரின் காரணமாக அவர்கள் சென்று வந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், தொழுகைக்குள்ள முக்கியத்துவம் இதுவாகும். அதாவது, நீங்கள் வீட்டில் இருந்தால் கூட குழந்தைகளை உங்களுடன் சேர்த்துக் கொண்டு ஜமாஅத்தாக தொழ வேண்டும். அதன் மூலம் குழந்தைகளிடமும் ஜமாஅத்தாக தொழுவதன் உணர்வு இருந்து வர வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையை அதன் முழுமையான நிபந்தனைகளைப் பேணியவாறு தொழ வேண்டும் என்பதை பெரிதும் போதித்து வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதுபற்றி கூறுகின்றார்கள்:

முழுமையான கட்டுப்பாட்டுடனும் விதிமுறைகளைப் பேணியவாறும் தொழுவது மிகவும் அழகான ஒரு விஷயமாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

மக்கள் கோழி கொத்தி கொத்தி தானியங்களை எடுப்பது போன்று தொழுகின்றனர். நிச்சயமாக அத்தகைய தொழுகைகள் பயனையும் தர முடியாது. மாறாக, சில நேரங்களில் அத்தகைய தொழுகைகள் சாபத்திற்குக் காரணமாக ஆகிவிடுகின்றது.

ஒருமுறை யாரோ ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் எங்களுக்கு கீழே உள்ளவர்கள் எங்களுக்கு ஸலாம் கூறுவதில்லை என்று புகார் கூறியிருந்தார். அப்போது அவர்கள் இந்த போதனையை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது கட்டளையை ஒரு சகோதரர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நாதே அதற்கேற்ப ஏன் செயல்படக் கூடாது? எனவே, இந்த புகார் சரியானதாக இருந்தால் இந்த செயல் அறிவுக்கு எதிரானதும் நல்லொழுக்கத்திலிருந்து வீழ்ந்து விட்ட செயலாகும். சிறியவர்தான் ஸலாம் கூற வேண்டும். பெரியவர் கூறக் கூடாது என்று எங்குமே கட்டளையிடப்படவில்லை. தனக்கு கீழுள்ளவர்கள் ஸலாம் கூறாமல் இருந்தால் அதிகாரி தாமே ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்ள வேண்டும்.

ஒரு வழக்கில் நீதிபதிக்கு உறுதியான எண்ணம் இருந்தது. இன்னும் சொல்வதென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கண்டிப்பாக தண்டனை வழங்க வேண்டும் என்று அவரிடம் வாக்குறுதி வாங்கியிருந்தனர். இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதற்கு முகவுரையாக சிலவற்றை முதலில் குறிப்பிடுகின்றார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் கணக்கெடுப்பை நடத்தினார்கள். அப்போது அவர்களின் எண்ணிக்கை 700 ஆக இருந்தது. ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரிகள் நம்மை அழித்து விடக்கூடாதே என்ற எண்ணம் ஏற்பட்டதால்தான் இந்த கணக்கெடுப்பை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள் என்று சஹாபாக்கள் கருதினர். சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இப்போது நாங்கள் 700 பேர்களாக ஆகிவிட்டோம். எங்களை எவராவது அழித்து விடுவார் என்று இப்போதும் கருத முடியுமா? என்று கேட்டனர். இது எத்தகைய மகிமைமிக்க ஈமானாக இருக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சம்பவம் இவ்வாறு இருக்கின்றது. ஒருமுறை அவர்கள் குர்தாஸ்பூரில் இருந்தார்கள். நான் அங்கு இருந்தேன். ஆனால் சம்பவம் நடந்த அந்த சபையில் நான் இருக்கவில்லை. இந்த சபையில் இருந்த நண்பர் எனக்கு இந்த சம்பவத்தைக் கூறினார். அதாவது, காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களும் மற்ற அஹ்மதிகளும் மிகவும் பயந்தவாறு வந்தனர். எவரிடம் இந்த வழக்கு விசாரனைக்கு வந்துள்ளதோ அந்த நீதிபதி லாஹூர் சென்றிருந்தார். மிர்ஸா சாஹிப் எங்கள் மதத்திற்கு கடுமையான எதிரியாக இருக்கின்றார். எனவே, அவருக்கு கண்டிப்பாக தண்டனை வழங்க வேண்டும். ஒருநாள் அந்த தண்டனை கொடுக்கப்பட்டாலும் சரியே! இது உங்களது சமுதாய தொண்டாக இருக்கும் என்று ஆரியர்கள் இந்த நீதிபதியிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்

இந்த விஷயத்தைக் கேட்டதும் படுத்திருந்த அவர்கள் எழுந்து சாய்ந்து உட்கார்ந்தவாறு காஜா சாஹிப்! நீங்கள் எத்தகைய விஷயங்களைப் பேசுகின்றீர்கள். எவராவது இறைவனின் சிங்கத்தின் மீது கை வைக்க முடியுமா? என்று கூறினார்கள். அல்லாஹ் அந்த நீதிபதிக்கு என்ன தண்டனை? வழங்கினான் என்றால் முதலில் அவருக்கு குர்தாஸ்பூரிலிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டது. பிறகு அவருக்கு வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது அவர் $E.A.C$ –யிலிருந்து சாதாரண நீதிபதி ஆக ஆக்கப்பட்டார். இன்னொரு நீதிபதி வந்து தீர்ப்பு வழங்கினார். எனவே, ஈமானின் சக்தி மிகவும் வலுவானதாகும். எவரும் அதை எதிர்த்து நிற்க முடியாது.

***இதே வழக்கு பற்றி ஹுஸூர் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

மிகவும் நீளமாகப் பேசுவது காஜா கமாலுத்தீன் சாஹிபின் பழக்கமாக இருந்தது. அவர்கள் ஹுஸூர்! நீதிபதி கண்டிப்பாக உங்களை கைது செய்து விடுவார். தண்டனை வழங்குவார். எனவே எதிர்தரப்பில் உள்ளவர்களுடன் சமாதானம் செய்து கொள்வது சிறந்ததாகும் என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கை முட்டுகளின் ஆதரவுடன் எழுந்து அமர்ந்தவாறு காஜா சாஹிப்! இறைவனது சிங்கத்தின் மீது கை வைப்பது என்பது எளிதான ஒரு விஷயமல்ல. நான் இறைவனின் சிங்கம் ஆவேன். எவராவது என் மீது கை வைத்துதான் பார்க்கட்டுமே! என்று கூறினார்கள். பிறகு அப்படித்தான் நடந்தது. இந்த வழக்கில் தீர்ப்பளிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த இரண்டு நீதிபதிகளில் ஒருவரது மகன் பைத்தியமாகி விட்டான். அவனது மனைவி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும் அவன் நீங்கள் ஒரு தூய முஸ்லிமை இழிவுபடுத்தியுள்ளீர்கள். அதன் விளைவாக ஒரு மகன் பைத்தியமாகி விட்டான். இப்போது அடுத்த மகன் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் என்று எழுதியிருந்தாள். அந்த நீதிபதி படித்தவராக இருந்ததால் எனது மனைவி ஏன் இத்தகைய அறிவீனமான விஷயங்களைப் பேசுகின்றாள்? என்று கூறினார். அவருக்கு அத்தகைய விஷயங்கள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. அவர் இதன் பக்கம் எந்த கவனமும் செலுத்தவில்லை. அதன் விளைவாக என்ன நடந்தது என்றால் அவரது இரண்டாவது மகன் ஆற்றில் மூழ்கி இறந்து விட்டான். அவன் ராவி ஆற்றிற்குச் சென்று அங்கு குளித்துக் கொண்டிருந்தான். முதலை அவனது கால்களைப் பற்றியது. இவ்வாறு அவன் அழிந்து விட்டான்.

அந்த நீதிபதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எந்த அளவு தொந்தரவு கொடுத்து வந்தான் என்றால் வழக்கு விசாரனையின்போது முழு நேரமும் அவர்களை நிற்கும்படி செய்திருந்தான். தண்ணீரின் தேவை உணரப்பட்ட போது தண்ணீர் குடிக்கக்கூட அவர் அனுமதி வழங்கவில்லை. இன்னொரு நீதிபதியும் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். எவ்வாறிருப்பினும், இந்த இருவரும் கடுமையாக அநீதியிழைத்து வந்தனர். பிறகு இவர்கள் தங்கள் முடிவையும் கண்டு கொண்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இவை ஆயாத்தே பய்யினாத் என்ற தெளிவான அடையாளங்களாகும். இதன் மூலம் அல்லாஹ் உலகில் தனது நபிமார்களின் உண்மையை வெளிப்படுத்துகின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறி வந்தார்கள். அதாவது ஒருமுறை ருஸ்தமின் வீட்டில் திருடன் வந்து விட்டான். ருஸ்தம் திருடனைப் பிடிக்க முயற்சி செய்தான். திருடனுக்கு குஸ்தி போடுவதற்குத் தெரியும். அவன் ருஸ்தமை கீழே விழும்படி செய்து விட்டான். இப்போது நான் கொல்லப்பட்டு விடுவேன் என்பதை ருஸ்தம் பார்த்ததும் ருஸ்தம் வந்து விட்டான் என்று அவன் கூறினான். திருடன் இந்தக் குரலைக் கேட்டதுமே அவனை விட்டு விட்டு உடனடியாக ஓடி விட்டான். சுருக்கமாக, திருடன் ருஸ்தமுடன் சண்டை போட்டுக் கொண்டே இருந்தான். அவனை கீழே விழவும் செய்து விட்டான். ஆனால் ருஸ்தம் என்ற பெயருக்கு பயந்து அவன் ஓடி விட்டான்.

இந்த சம்பவத்தைப் பற்றி ஹுஸூர் (ரலி) அவர்கள் இவ்வாறு போதனை செய்துள்ளார்கள்: சில நேரங்களில் சில மக்கள் எத்தகைய வதந்திகளைப் பரப்பி வருகின்றனர் என்றால் அதனால் மக்களது தைரியம் குறைந்து விடுகின்றது. எனவே, தனது வீரத்தையும் தைரியத்தையும் நிலைநாட்டுவதற்காக தவறான வதந்திகள் பரவுவதை தடுப்பது மிகவும் அவசியமானதாகும். மேலும் அதை எதிர்த்து நிற்க வேண்டும். இவ்வாறு சில நேரங்களில் வதந்திகள் தவறான முறையில் சுற்றுச்சூழலை அச்சத்திற்கு ஆளாக்கி விடுகின்றது. எனவே, எப்போதும் வதந்திகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வேண்டும். அத்தகைய நிலைமைகளின் தைரியத்தை வெளிப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

கரம்தீன் தொடர்பான வழக்கு பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த பயணம் அவர்களது வெற்றி ஆரம்பமாகின்ற முதல் அடையாளமாகும். ஒரு வகையில் ஒரு இராணுவ வழக்கில் பதில் கூறுவதற்காக அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். அவ்வாறிருந்தும் கூட மக்கள் கூட்டத்தின் நிலைமை எவ்வாறிருந்தது என்றால் அதை எவரும் கணித்து கூறி விட முடியாது. ஜெஹ்லம் ஸ்டேஷனில் அவர்கள் இறங்கியபோது அப்போது அங்கு எந்த அளவு மக்கள் கூட்டம் இருந்தது என்றால் பிளாட்ஃபார்மில் நிற்பதற்கு இடம் இருக்கவில்லை. இன்னும் சொல்வதென்றால், ஸ்டேஷனுக்கு வெளியே கூட ரோட்டின் இருபுறமும் எந்த அளவு மக்கள் கூட்டம் இருந்தன என்றால் வண்டி அந்த இடத்தைக் கடந்து செல்வது சிரமமானதாக இருந்தது. நகரம் வரை மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் வழி கிடைக்காமல் இருந்தது. நகரத்தைச் சார்ந்தவர்களைத் தவிர ஆயிரக்கணக்கான மக்கள் கிராமங்களிலிருந்தும்

அவர்களைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். ஏறக்குறைய ஓராயிரம் மக்கள் இந்த இடத்தில் பைஅத் செய்தனர். சில நேரங்களில் ஒரே நாளில் 500 பேர் பைஅத்திற்கான கடிதத்தை எழுதினர். அவர்களைப் பின்பற்றுபவர்கள் தமது எண்ணிக்கையில் ஆயிரக்கணக்கில், இன்னும் சொல்வதென்றால் இலட்சக்கணக்கில் ஆகிவிட்டனர். எல்லா வகையிலுள்ள மக்களும் அவர்களது கையில் பைஅத் செய்தனர். இந்த தொடர் மிகவும் வலுவாகப் பரவ ஆரம்பித்தது. பஞ்சாபியிலிருந்து வெளியேறி அன்னாரின் வாழ்நாளிலேயே அது மற்ற மாநிலங்களிலும் மற்ற நாடுகளிலும் பரவ ஆரம்பித்தது.

அல்லாஹ் ஒருவர் மற்றவரை இழிவுபடுத்தும் போது அதற்கான தண்டனையை எவ்வாறு வழங்குகின்றனர்? என்பதை நீதிபதியின் சம்பவத்திலிருந்து கேட்டோம். இன்னொரு சம்பவத்தையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எல்லைப்புறத்தைச் சார்ந்த அப்துல் கரீம் என்ற மவ்லவி இருந்தார். அவர் நமது ஜமாஅத்தின் கடுமையான எதிரியாக இருந்து வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு சம்பவத்தை அவர் மிகவும் இழிவான முறையில் எடுத்துக் கூறினார். அவர் போலியான இன்ஸ்பெக்டராக தன்னை ஆக்கிக் கொண்டு அங்கு வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அச்சுறுத்துவதற்காக நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆவேன் என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர் பக்கம் கவனம் செலுத்தவில்லை. ஆனால், சில நண்பர்கள் இந்த நபர் யார்? என்று ஆராய விரும்பினர். இதை அறிந்து அவர் அங்கிருந்து ஓடி விட்டார்.

இது முற்றிலும் பொய்யான விஷயமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கீழே வராண்டாவிலுள்ள வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்தார்கள்.

மவ்லவி அப்துல் கரீம் தொடர்ந்து கூறுகின்றார்: போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்துள்ளார் என்பதை அவர் கேட்டதும் அவர் எந்த அளவு பயந்து விட்டார் என்றால் மாடிப்படிகளில் இறங்கி வரும்போது அவரது கால் வழுக்கி விட்டது. அதனால் அவர் தலை குப்புற தரையில் வந்து விழுந்தார் என்று கூறினார். மக்கள் இந்த சொற்பொழிவைக் கேட்டு பரிகாசமாக சிரித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், அதே இரவில் மவ்லவி அப்துல் கரீமை இறைவன் பிடித்தான். அவர் தனது வீட்டின் மொட்டை மாடியில் தூங்கிக் கொண்டிருந்தார். இரவில் ஏதோ பணி நிமித்தமாக இருந்ததால் மேலும் தூக்கத்தில் அவரது கண்கள் மூடியிருந்தது. அவரது ஒரு கால் மாடிக்கு வெளியில் சென்றது. அவர் கீழே விழுந்தார். விழுந்ததும் இறந்து விட்டார். எவ்வாறிருப்பினும், அவரது இந்த முடிவின் மூலம் இறைவனது நபிமார்களை பரிகாசம் செய்வதன் விளைவு எவ்வாறானதாக இருக்கும் என்பது அதை பார்க்கின்றவர்களுக்கு தெரிந்து விட்டது.

இன்று எந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பரிகாசமாக நடந்து கொள்கின்றனரோ அவர்கள் வீணான விஷயங்களைப் பேசுகின்றனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு எல்லாரையும் விட பிரியமான நபியாக இருக்கின்றார்கள். அவ்வாறிருக்க அவர்கள் தொடர்பாக வீணான விஷயங்களைப் பேசுபவர்களை அல்லாஹ் வெறுமனே செல்ல விட்டு விடுவானா? இல்லை. மாறாக, அல்லாஹ் அத்தகைய மக்களை இவ்வுலகிலும் கூட படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்கி விடுவான். எனவே, அத்தகைய மக்களுக்கான சிகிச்சையை முஸ்லிம்கள் தமது கைகளால் அல்லது துப்பாக்கியின் மூலம் செய்யக் கூடாது. மாறாக, துஆக்கள் மூலம் அதை செய்ய வேண்டும். இதைப் பற்றிய சரியான அறிவும் அஹ்மதிகளுக்குதான் இருக்கின்றது. நாம் நமது வேதனையை துஆக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். இந்த நாட்களில் குறிப்பாக துஆ செய்ய வேண்டும்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைக் கூறிவிட்டு தொடர்ந்து கூறுகின்றார்கள்:***

எனவே, உங்களிடம் எத்தகைய தூய மாற்றத்தை நீங்கள் உருவாக்க வேண்டும் என்றால் உலகம் அதனை உணர வேண்டும். உங்களது நிலைமை எவ்வாறிருக்க வேண்டுமென்றால் உங்களது தக்வாவையும், தூய்மையையும், துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதும், இறைவனுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்பு ஆகியவற்றைப் பார்த்து மக்கள் இதன் பக்கம் ஈர்க்கப்பட்டவர்களாக வர வேண்டும். நினைவில் கொள்ளுங்கள்! அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் இத்தகைய மக்களின் மூலமாகத்தான் நடக்கும். நீங்கள் இந்த உயர் தகுதி வரை அல்லது அதற்கு அருகில் சென்று விட்டால் பிறகு நீங்கள் வெளியில் காலெடுத்து வைக்காமல் ஒரு மறைவான மூலையில் அமர்ந்தாலும் கூட அங்கும் மக்கள் உங்களுக்கு அருகில் ஒன்றுகூடி விடுவர். அவர்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து விடுவர்.

***ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட்டிற்குச் சென்றார்கள். அப்போது மவ்லவிகள் யார் இவரது சொற்பொழிவைக் கேட்பதற்குச் செல்வார்களோ அவரது நிகாஹ் முறிந்து விடும் என்று ஃபத்வா கொடுத்திருந்தனர். ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் ஈர்ப்பு எந்த அளவு இருந்தது என்றால் மக்கள் இந்த ஃபத்வாவையும் பொருட்படுத்தவேயில்லை. .

ஹஸ்ரத் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிகுந்த கலப்பற்ற

மனத்தூய்மையைக் கொண்ட சஹாபி ஆவார்கள். அவர்களைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அஹ்மதிய்யத்தில் வருவதற்கு முன்னதாக அவர் வஹ்ஹாபிகளின் புகழ்பெற்ற ஆலிமாக இருந்தார். ஏழ்மையில் அவர் தமது நாட்களைக் கழித்தார். மிகவும் தன்னிறைவு பெற்ற இயல்பை உடைய மனிதராக இருந்தார். அவரைப் பார்ப்பவர் இவர் ஒரு ஆலிம் ஆவார் என்று எவராலும் புரிந்து கொள்ள முடியாது.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எனக்கு அவர்களது நகைச்சுவை ஒன்று எப்போதும் நினைவில் இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் சியால்கோட் சென்றதும் அங்கு கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டு அவர்கள் அங்கிருந்து திரும்பி வந்த போது எதிரிகளுக்கு எந்தெந்த நபர் தொடர்பாக அவர் அஹ்மதிய்யாவார் என்று தெரிய வந்ததோ அவருக்கு அவர்கள் கடுமையான துன்பங்களைக் கொடுக்க ஆரம்பித்தனர். மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களை இரயிலில் பயணம் செய்ய வழி அனுப்பி விட்டு ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது மக்கள் சானத்தை எடுத்து அவர்கள் மீது வீசத் தொடங்கினர். ஒருவர் சானத்தை அவரது வாயில் போட்டு விட்டார். ஆனால், அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த துன்பத்தைச் சகித்துக் கொண்டார்கள். எப்போதெல்லாம் இவர் மீது சானம் எறியப்பட்டாலும் அவர் மிகுந்த இன்பத்துடன் இந்த நாட்கள் எப்போது கிடைக்கப் போகின்றது? இந்த மகிழ்ச்சிகள் எப்போது கிடைக்கப் போகின்றது? என்று கூறுவார்கள்.

இதைப் பற்றி கூறுபவர் கூறுகின்றார்: சிறிதளவு கூட அவரது நெற்றியில் மாற்றத்திற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

அவர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு அஹ்மதியானாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் வாதம் செய்வதற்கு நீண்ட காலம் முன்பே அவர்கள் அன்னாரை அடையாளங்கண்டு கொண்டு விட்டார்கள். பிறகு நடுவில் சற்று இடைவெளி ஏற்பட்டு விட்டது. அவர்கள் ஆரம்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களைப் பற்றி கேள்விப்பட்டதும் அவர்கள் நடந்தே காதியான் வந்து சேர்ந்தார்கள். இங்கு வந்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் சென்று விட்டார்கள் என்று தெரிய வந்தது. ஒரு வழக்கு விசாரணையில் ஆஜராக வேண்டியது இருந்தது அல்லது வேறு ஏதோ காரணம் இருந்தது. எனக்கு அதுபற்றி சரியாகத் தெரியவில்லை. மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் உடனடியாக குர்தாஸ்பூருக்கு சென்றார்கள். அங்கு மர்ஹூம் ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்கள் அவர்களைச் சந்தித்தார்கள். இவர்களும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களது நீண்ட கால ஊழியராகவும் அன்னாரது வாதத்திற்கு முன்பே அவர்களுடன் இருந்து வருபவரும் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் கீழுள்ள வீட்டிலோ அல்லது வேறு எங்கோ தங்கியிருந்தார்கள். எந்த அறையில் அவர்கள் தங்கி இருந்தார்களோ அந்த அறையின் கதவுகளில் திரை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் கேட்டதற்கு ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் தமது அறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். நான் அவர்களை சந்திக்க விரும்புகிறேன் என்று மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் கூறினார்கள். அதற்கு ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களுக்கு பணிகள் அதிகமாக இருப்பதால் சந்திப்பதை தடை செய்துள்ளார்கள். மேலும் அவர்களை அழைக்கக் கூடாது என்று கட்டளையிட்டுள்ளார்கள் என்று கூறினார்கள். எப்படியாவது நான் அவர்களை சந்திக்கும்படி செய்து விடுங்கள் என்று மவ்லவி சாஹிப் கெஞ்சினார்கள். அதற்கு ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள், தன்னை சந்திப்பதை அவர்கள் தடை செய்து இருக்கும் போது என்னால் எப்படி அவர்களிடம் கூற முடியும்? என்று கேட்டார்கள். ஆனால், இறுதியில் மிகவும் கெஞ்சி விண்ணப்பித்த பிறகு அவர்கள் ஹாஃபிஸ் சாஹிபிடமிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் தங்கியிருந்த அறையிலுள்ள திரையை சற்று விலக்கி விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களைப் பார்ப்பதற்காக அல்லது அன்னாரது பார்வையில் படாமல் அவர்களைப் பார்ப்பதற்காக அனுமதி பெற்றுக் கொண்டார்கள். இதுபற்றிய விபரம் எனக்கு நினைவில் இல்லை என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் இருந்த அந்த அறையின் பக்கம் சென்றார்கள். திரையை உயர்த்தி விட்டு எட்டிப் பார்த்தார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் இங்குமங்கும் நடந்து கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள். அப்போது கதவின் பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்களி முதுகு இருந்தது. மிகவும் விரைவாக அன்னார் அடுத்த திசையை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் எப்போது ஒரு நூலையோ அல்லது ஒரு பிரசுரத்தையோ அல்லது ஒரு கட்டுரையையோ எழுதினாலும் சில நேரங்களில் இங்குமங்கும் நடந்தவாறு எழுதுவதும் மிக மெல்லிய குரலில் உடனுக்குடன் அதைப் படிப்பதும் அவர்களது பழக்கமாக இருந்தது. அந்த நேரத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் ஒரு கட்டுரையை எழுதிக் கொண்டிருந்தார்கள். மிகவும் விரைவாக இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அத்துடன் எழுதியதை உடனுக்குடன் படித்துக் கொண்டே இருந்தார்கள். சுவரின் அருகில் சென்று விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் திரும்பிய போது அவர்கள் என்னை பார்த்து விடக்கூடாது என்பதற்காக நான் அங்கிருந்து ஓடி விட்டேன்

என்று மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்களோ அல்லது வேறு யாரோ என்ன நடந்தது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். ஆம்! எனக்கு தெரிந்து விட்டது என்று கூறினார்கள். பிறகு பஞ்சாபியில் எவர் அறையில் இந்த அளவு வேகமாக நடக்கின்றாரோ அவர் சென்றடைய வேண்டிய இலக்கு மிகவும் தொலைவில் இருக்கின்றது என்பது தெரிந்து விட்டது என்று கூறினார்கள். அந்த சமயத்திலேயே அவர்களது உள்ளத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் உலகில் மகத்தான பணியைச் செய்து முடிப்பார்கள் என்ற விஷயம் பதிந்து விட்டது.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

விரைவாக வேலை செய்வதன் மூலம் நேரம் அதிகமாக மிச்சமாகின்றது. பிறகு அன்னார் கூறினார்கள். சிறுவர்களிடம் விரைவாக வேலை செய்வது மற்றும் விரைவாக சிந்திப்பது ஆகிய பழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். ஆனால், விரைவா செயல்படுவது என்பதன் பொருள், அவசரப்படுவது என்பதல்ல. மாறாக, சிந்தித்துப் புரிந்து விரைவாக செயல்பட வேண்டும். அவசரமாக செயல்படுபவன் ஷய்த்தான் ஆவான். ஆனால், சிந்தித்து புரிந்து விரைவாக செயல்படுகின்றவர் இறைவனின் சிப்பாய் ஆவார்.

இந்த சோம்பேறித்தனம் பலரிடமும் உருவாகி விடுகின்றது. இப்போது ஓய்வு எடுத்துக் கொள்வோம். பிறகு வேலையைச் செய்வோம் என்று நினைக்கின்றனர். இதனால் எப்போதும் பணிகள் தாமதமாக நடக்கின்றது. இது சிறுவர்களுடன் தொடர்புடைய விஷயம் மட்டுமல்ல. வயதில் பெரியவர்களும் பொறுப்பாளர்களும் கூட தங்களது பணியை விரைவாக செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஏனென்றால், நாம் எந்த மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்குமோ அவர்கள் நேரத்திற்கு மிகவும் மதிப்பளித்திருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால், அல்லாஹ்வும் இல்ஹாம் மூலமாக அவர்களது நேரம் வீணாகமல் இருக்கும் மூலமாக அவர்களது நேரம் வீணாகாமல் இருக்கும் என்று கூறியுள்ளான். எனவே, நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

***இதைக் கூறியவாறு ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மவ்லவி சாஹிபின் மீது இந்த அநீதிகள் இழைக்கப்பட்ட சமயத்தில் மவ்லவி சாஹிப் அவர்களை ஏசுவது அல்லது கூச்சல் போடுவது ஆகியவற்றிற்கு பதிலாக அவர்கள் மிகவும் நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் சுப்ஹானல்லாஹ். இந்த நாட்கள் யாருக்கு கிடைக்கும்? இந்த நாட்கள் அல்லாஹ்வின் நபிமார்கள் வரும்போதுதான் கிடைக்கின்றது. இந்த நாளை எனக்கு காட்டியவாறு அல்லாஹ்வின் பேருபகாரமாகும் என்று அவர்கள் கூறிக்கொண்டே இருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டவர்கள் இதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள்.

விஷயம் என்னவென்றால், இந்த மக்கள் மரணத்திற்கு அஞ்சுகின்றனர் என்பதை எதிரிகள் பார்க்கின்ற போது வாருங்கள்! இவர்களை நாம் அச்சுறுத்துவோம் என்று எதிரிகள் கூறுகின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: ஷய்த்தான் தனது நண்பர்களை அச்சுறுத்துகின்றான். எனவே, ஒரு நபர் பயப்படுகின்றபோது எதிரிகள் இவர் ஷய்த்தானிய மனிதராவார் என்பதைப் புரிந்து கொள்கின்றனர். ஆனால், அவர் அஞ்சாமல் இருந்தால் மேலும் இந்த தாக்குதல்களையும் துன்பங்களையும் இறைவனின் அருட்கொடையாகக் கருதினால், மேலும் இறைவன் தனது அருளால் இந்த கண்ணியமிக்க தகுதியை வழங்கியுள்ளான். அவன் என் மீது பேருபகாரம் செய்துள்ளான். எனவேதான், நான் அவனுக்காக அடி வாங்குகின்றேன் என்று கூறும்போது எதிரி பயப்படுகின்றான். திகிலுக்கு ஆளாகி விடுகின்றான். இறுதியில் அவனிடம் வெட்க உணர்வு ஏற்பட்டு விடுகின்றது.

மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் தொடர்பாக இன்னொரு சம்பவமும் இருக்கின்றது. மவ்லவி சாஹிப் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தூய உள்ளம் கெண்ட சஹாபியாக இருந்தார். மிகவும் நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதராக இருந்தார். இவர்களது வஃபாத் மற்றும் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களது வஃபாத்தின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மத்ரஸா அஹ்மதிய்யாவை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் உருவானது. பிறகு அது இப்போது ஜாமிஆ அஹ்மதிய்யாகவாக ஆகி விட்டது.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மவ்லவி சாஹிப் ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். நான் கனவில் இறந்து போன எனது சகோதரியைப் பார்த்தேன். அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களிடம் சகோதரியே! அங்கு உங்களது நிலைமை எவ்வாறிருக்கின்றது? என்று கேட்டேன். அதற்க அவர்கள் இறைவன் என் மீது பேரருள் புரிந்துள்ளான். என்னை அவன் மன்னித்து விட்டான். இப்போது நான் சுவர்க்கத்தில் சுகமாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். நான் அவர்களிடம், சகோதரியே! அங்கு நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? என் கேட்டேன். அதற்கு அவர்கள் நான் இங்கு இலந்தை பழங்களை விற்று வருகின்றேன் என்று கூறினார். இதுவும் நகைச்சுவையாகும். மவ்லவி சாஹிப் கனவிலேயே, நமது பாக்கியமும் வியப்பாகத்தான் இருக்கின்றது. சுவர்க்கத்தில் கூட இலந்தை பழத்தைத்தான் விற்க வேண்டியது உள்ளது என்றார்கள். இவர்களது குடும்பத்தில் ஏழ்மை இருந்தது. எனவே, கனவிலும் அவர்களது எண்ணம் இதன் பக்கம் சென்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இந்த கனவை அவர்கள் கூறியதும் அன்னார் கூறினார்கள்: மவ்லவி சாஹிப்! இதன் விளக்கம் வேறொன்றாகும். ஆனால், கனவில் கூட உங்களுக்கு நகைச்சுவை மறக்கவில்லை. (ஏனென்றால் அவர்களிடம் நகைச்சுவையாக பேசுவது இருந்து வந்தது.)

பிறகு அன்னார் கூறினார்கள்: இலந்தை பழம் உண்மையில் சுவர்க்கத்தின் கனியாகும். இதற்கு என்றும் அழியாத முழுமையான அன்பு என்பது பொருளாகும். ஏனென்றால் ஸித்ரா இலந்தை மரம் என்பதும் என்றும் அழியாத அன்பின் உயர்ந்த தகுதியாகும். இதன் பொருள் என்னவென்றால் நான் என்றும் அழியாத இறைவன் மீதுள்ள முழுமையான அன்பை மக்களிடம் விநியோகம் செய்கின்றேன் என்றே உங்கள் சகோதரி கூறுகின்றார்.

பிறகு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக, நம்பிக்கையாளர் எந்த இடத்தில் இருந்தாலும் அவருக்கு பணி செய்ய வேண்டியது வரும்.

அதாவது, மரணத்திற்குப் பிறகு சுவர்க்கத்தில் சென்று விட்டால் பிறகு ஓய்வுதான் என்பதில்லை. பணி செய்ய வேண்டியது வரும். மவ்லவி சாஹிபின் சகோதரியும் அங்கு என்ன பணியைச் செய்கின்றார்கள் என்பதை கூறியிருந்தார்கள். ஏதாவதொரு சமயத்தில் எவருடைய மூளையிலாவது இது ஓய்வெடுக்க வேண்டிய நேரமாகும் என்ற எண்ணம் வந்தால் அதற்கு அவர் தனது ஈமானை தொலைத்து விட்டார் என்றே பொருள். ஏனென்றால், எந்த விஷயத்தை இஸ்லாம் ஈமான் என்றும் ஓய்வு என்றும் கூறுகின்றதோ அது பணி செய்வதேயாகும்.

நீங்கள் ஓய்வாக இருக்கும்போது இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும். உங்களது இறைவன் பக்கம் ஓட வேண்டும்.

இந்தக் கருத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உலகத்திலுள்ள மக்கள் எதனை ஓய்வு என்று கூறுகின்றனரோ அந்த பொருளில் உங்களுக்கு எந்த ஓய்வும் இல்லை. ஆனால், எந்த பொருளில் திருக்குர்ஆன் ஓய்வு பற்றிய வாக்குறுதியை தருகின்றதோ அதை நீங்கள் எளிதாக பெற்றுக் கொள்ளலாம். உலகம் எந்த பொருளில் ஓய்வின் கருத்தை புரிந்திருக்கின்றதோ நிச்சயமாக அது தவறாகும். இந்த பொருளில் எவர் ஓய்வை தேடுவாரோ அவர் இந்த உலகிலும் குருடராக இருப்பார். மறுமையிலும் குருடராக எழுப்பப்படுவார்.

எனவே, நம்பிக்கையாளரின் பணி எப்போதும் தன்னை பணியில் ஈடுபடுத்துவதேயாகும். ஒரு இலக்கை அடைந்த பிறகு அடுத்த இலக்கை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இதுதான் தனிப்பட்ட மற்றும் சமுதாய அளவிலுள்ள முன்னேற்றத்திற்கான அருமருந்தாகும். இதில்தான் முன்னேற்றத்தின் இரகசியம் இருக்கிறது.

அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! ஆமீன்.

From : Nazarath Nashr-o-Isha'ath, Qadian - 143 516, Distt Gurdaspur, Punjab.

Translated by **Maulavi M.B. Tahir Ahmad** for Tamil Desk